கட்டுரை 12 · ARTICLE 12 | நவீன இலக்கியங்கள்: நாவல், கவிதை

# மலர்வதியின் படைப்புகளில் தகவல் தொடர்பியல்

*Communication in the Works of Malarvathi*

**கி. சுமதி**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை மற்றும் உயராய்வு மையம்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

***K. Sumathi**, Research Scholar (Part-time), Department of Tamil, Sree Sevugan Annamalai College, Devakottai*

**மின்னஞ்சல்:** sumathisaran83@gmail.com · **ORCID:** https://orcid.org/0009-0000-4932-4303

நெறியாளர்: முனைவர் மு.சு. கண்மணி, இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் உயராய்வு மையம், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

**பக்கங்கள்:** 77–82

## ஆய்வுச் சுருக்கம்

மனிதர்களுக்கிடையே கருத்து, உணர்வு, அனுபவம், அறிவு ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்வதற்கு முதன்மையான கருவியாக மொழி விளங்குகின்றது. தகவல் தொடர்பு என்பது ஊடகங்களின் வழியாக மட்டுமே நிகழ்வதல்ல. மனிதர்களின் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் மொழியும் ஒரு முக்கியமான தகவல் தொடர்புச் சாதனமாகத் திகழ்கின்றது. அந்த வகையில் மலர்வதியின் படைப்புகளில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்கள், உரையாடல்கள் மற்றும் வட்டார மொழிச் சொற்கள் ஆகியவை தகவல் தொடர்பியல் நோக்கில் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன. குறிப்பாக, மொழி மனிதர்களின் கருத்துகள், உணர்வுகள், வாழ்வியல் அனுபவங்கள் மற்றும் பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்ளும் தகவல் தொடர்புச் சாதனமாகச் செயல்படுகிறது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** மொழி; தகவல் தொடர்பியல்; சீழ்க்கை ஒலி; காத்திருந்த கருப்பாயி; தூப்புக்காரி; அண்டியாபீசு

## Abstract

Language serves as the primary means of communication through which human beings exchange ideas, emotions, experience and knowledge. Communication does not take place only through various media; the language used in the everyday life of human beings also functions as an important means of communication. In this context, the spoken expressions, dialogues and regional-language words found in Malarvathi’s works are examined from the perspective of communication studies. In particular, this study examines how language functions as a means of communication through which ideas, emotions, life experiences and cultural elements are shared.

**Keywords:** Language; Communication studies; Whistling sound; Kaathirundha Karuppayi; Thooppukari; Andiyaabeesu

## முன்னுரை

மனிதன் தனக்குள் தோன்றும் எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறரிடம் பகிர்ந்து கொள்வதற்குப் பயன்படுத்தும் அடிப்படைக் கருவி மொழியாக அமைகின்றது. ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தகவலைக் கொண்டு செல்வதோடு மட்டுமல்லாமல் ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைக்கும் அறிவையும் அனுபவத்தையும் பண்பாட்டையும் எடுத்துச் செல்லும் ஊடகமாகவும் மொழி விளங்குகின்றது. தகவல் தொடர்பு என்றவுடன் நாளிதழ், வானொலி,

தொலைக்காட்சி, இணையம் போன்ற ஊடகங்கள் தான் நினைவுக்கு வருகின்றன. ஆனால் இவற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே மனிதர்களுக்கிடையிலான நேரடித் தொடர்பில் மொழி முதன்மையான சாதனமாக இருந்து வருகின்றது. அவ்வகையில் மலர்வதியின் படைப்புகளில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்கள், உரையாடல்கள் மற்றும் வட்டார மொழிச் சொற்கள் ஆகியவை கதைமாந்தர்களின் வழியாக மக்களிடையே பரப்பப்படுகின்றன. எனவே மலர்வதியின் படைப்புகளில் மொழி என்பது வெறும் இலக்கிய வெளிப்பாட்டு முறையாக இல்லாமல் தகவலைப் பரிமாறும் தொடர்பியல் சாதனமாகச் செயல்படுகிறது என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகின்றது.

## தகவல் தொடர்பியல்

மனித வாழ்க்கையின் அடிப்படையான செயல்பாடுகளில் ஒன்றாகத் தகவல் தொடர்பு அமைகின்றது. தகவல் தொடர்பியல் என்பது செய்திகள், கருத்துகள் மற்றும் உணர்வுகளை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பகிர்ந்து கொள்ளும் முறையைக் குறிப்பதாகும். இதில் ‘தகவல்’, ‘தொடர்பு’ என்ற இரு சொற்கள் இணைந்துள்ளன. ‘தகவல்’ என்றால் ‘இரு இடங்களை இணைப்பது’ என்று பொருளாகும். ‘தொடர்பு’ என்பதற்கு ‘ஓர் இடத்திலிருந்து தொலைவில் இருக்கும் மற்றொரு இடத்திற்குத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளப் பயன்படுத்தும் அமைப்பு’ என்பது பொருளாகும். இதனை,

“இருவர் அல்லது இரு அமைப்புகளிடையே நடைபெறுகின்ற செய்திப் பரிமாற்றமும் அதனால் ஏற்படும் தெளிவும் தகவல் தொடர்பு எனப்படும்” என்று வெ. கிருட்டிணசாமி ‘தகவல் தொடர்பியல்’ என்னும் நூலில் விளக்கம் அளித்துள்ளார்.

## தகவல் தொடர்பியலின் தோற்றம்

பன்னெடுங்காலமாக மனிதன் பிறரைப் பற்றி அறிய ஆவலாக இருந்திருக்கிறான் தன்னுடைய பெருமைகளையும் வீர, தீரச் செயல்களையும் இன்ப துன்பங்களையும் பிறருடன் பகிர்ந்து கொள்ள விழைந்தான். மற்றவர்களுடன் பழகும் போது தன்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மை இருந்ததனால் பிறரது நிறை, குறைகளை அவனால் காண முடிந்தது. இதை வள்ளுவரும்,

> “ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
> தீதுண்டோ மன்னு முயிர்க்கு”

(குறள் : 190)

என்று குறிப்பிட்டுள்ளார். பிறரைப் பற்றி அறிவதில் மனிதனுக்கு ஈடுபாடு இருந்துள்ளது. இக்குணமே தகவல்தொடர்பு தோன்றக் காரணமாக அமைந்தது. பின்னர் தன் வட்டாரத்தை அறிந்து நாடு, உலகம் போன்றவற்றையும் தெரிந்து கொள்ள விரும்பினான். இதனை,

> “எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
> வல்லறிதல் வேந்தன் தொழில்”

(குறள் : 582)

என்னும் குறளில் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ள வேண்டியது அரசனின் கடமை என்று வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் உலகின் பல்வேறு நிகழ்வுகளையும் செய்திகளையும் அறிந்து கொள்வதற்குத் தகவல் தொடர்பு இன்றியமையாததாகத் திகழ்கின்றது.

## வரலாற்றிற்கு முற்பட்ட காலம்

தனிமனிதன் கூட்டு வாழ்க்கையாக, சமுதாயமாக வாழத் தொடங்கிய போது மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. தம் கருத்தைக் கூறவும், பிறர் கருத்தை அறியவும், தம்மைச் சுற்றிலும் நடக்கும் நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்ளவும் பண்டைக் கால மக்கள் ஒருவருடன் மற்றொருவர் தொடர்பு கொண்டனர். அன்றைய மனிதனுக்கு ஒரு சாண் வயிறே பிரதானமாக இருந்ததால் காலை முதல் மாலை வரை உணவைத் தேடியே அலைந்தான். வயிற்றுப்பசி அடங்கிய பின்னர் வேறு சிலவும் அவனுக்குத் தேவைப்பட்டன. அப்போது அவன் தன் எண்ணங்களையும் கருத்துகளையும் பல வகைகளில் வெளிப்படுத்தினான்.

## மொழி தோன்றும் முன்பு உடலசைவு

மொழி உருவாவதற்கு முன்பாக மனிதன் தனது உடலசைவுகள், சீழ்க்கை ஒலி, கூவியழைத்தல், புகையெழுப்பல், பறையறைதல், மணியடித்தல், தீயம்புகளை வானத்தில் எறிதல் போன்றவற்றின் வழியாகத் தன்னைச் சுற்றியுள்ள வட்டார மக்களுக்குத் தேவையான செய்திகளை அனுப்பினான். இவை மனிதனின் ஆரம்பகாலத் தகவல் தொடர்பு முறைகளாகக் கருதப்படுகின்றன. ‘சீழ்க்கை ஒலி’ என்பது ‘விசில்’ சத்தத்தைக் குறிப்பதாகும். காடுகளில் ஆடு, மாடுகளை மேய்க்கும் ஆயர்கள் விலங்குகளை வழிநடத்தவும் வேட்டுவர்கள் குறிவைக்கவும் இந்த ஒலியைப் பயன்படுத்தினர்.

> “தண்டு கால் வைத்த ஒருங்குநிலை மடிவிளி
> சிறுதலைத் தொழுதி ஏமார்த்து அல்கும்”
>
> (நற். பா: 142)

என்ற நற்றிணைப் பாடல் வரிகளில் இடையன் வாயைக் குவித்து எழுப்பும் அழைப்பொலியைக் கேட்டு ஆடுகள் தம் இடத்தை விட்டு அகலாமல் நிற்கின்றன என்ற செய்தி பதிவாகின்றது. இதன் வழியாக ஒலியின் மூலம் செய்தியைப் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற கருத்து புலப்படுகின்றது. பின்னர் இவ்வொலிகள் படிப்படியாக ஒழுங்குபெற்று குறிப்பிட்ட பொருளைக் குறிக்கும் சொற்களாகவும் மொழியாகவும் வளர்ச்சி பெற்றன. சங்க காலத்தில் மனிதர்கள் தங்களுடைய கருத்துகள், எண்ணங்கள் மற்றும் செய்திகளைப் பிறரிடம் எடுத்துரைப்பதற்கு மொழியை முதன்மையான தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்தினர். இதற்குச் சான்றாக,

> “இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
> கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து
> கடியுடை வியன்நகரவ்வே; அவ்வே
> பகைவர்க் குத்தி கோடு நுதி சிதைந்து
> கொல்துறைக் குற்றில மாதோ; என்றும்”
>
> (புறம். பா: 95)

என்ற புறநானூற்றுப் பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் தூதராக ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்று அதியமானின் படைவலிமையையும் வீரத்தையும் வாய்மொழியாக எடுத்துரைத்த நிகழ்வைச் சுட்டிக்காட்டுகின்றது. இதன் மூலம் சங்க காலத்தில் அரசியல் மற்றும் சமூகச் செய்திகளை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பகிர்ந்து கொள்வதில் மொழி முக்கியத் தொடர்புச் சாதனமாகப் பயன்பட்டமை தெளிவாகின்றது.

## மலர்வதியின் படைப்புகளில் தகவல் தொடர்பியல்

அடித்தள மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்யும் பெண் எழுத்தாளராக மலர்வதி திகழ்கின்றார். இவர் நாவல்கள், சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் ஆகியவற்றைப் படைத்துள்ளார். 2012ஆம் ஆண்டு இளம் எழுத்தாளர்களுக்கான யுவபுரஸ்கார் சாகித்திய அகாதெமி விருதைப் புதினத்திற்காகப் பெற்றார். இவருடைய படைப்புகள் அனைத்தும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகள், பெண்களின் துயரங்கள், சமூக அநீதிகள் உள்ளிட்ட சமூகப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. ‘காத்திருந்த கருப்பாயி’, ‘தூப்புக்காரி’, ‘அண்டியாபீசு’ போன்ற புதினங்களில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்கள், வட்டார மொழிச் சொற்கள் மற்றும் உரையாடல்கள் ஆகியவற்றின் வழியாக மொழியானது தகவல் தொடர்பாகச் செயல்படுகின்றது. இத்தகவல் தொடர்பு மூன்று வழிகளில் ஆராயப்படுகின்றது. அவை,

- உணர்வுகளைப் பரிமாறும் மொழிவழித் தகவல் தொடர்பு
- சமூகச் சிந்தனைகளைப் பரிமாறும் மொழிவழித் தகவல் தொடர்பு
- வட்டார மொழிவழித் தகவல் தொடர்பு

என்பவையாகும்.

## உணர்வுகளைப் பரிமாறும் மொழிவழித் தகவல் தொடர்பு

சங்க இலக்கியங்களில் மொழி மனிதர்களின் அக உணர்வுகளைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் ஊடகமாக அமைகின்றது. சான்றாக, குறுந்தொகைப் பாடல்களில் காதல், அன்பு, பிரிவு, ஏக்கம், உறுதி போன்ற உணர்வுகள் தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகளின் வழியாக வெளிப்படுகின்றன. ஆகையால் ஒருவரின் உள்ளத்தில் தோன்றிய உணர்வு மொழியின் வழியாக மற்றொருவரிடம் சென்று உணர்ந்து கொள்ளப்படுகிறது. இதனை,

> “நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
> நீரினும் ஆரள வின்றே சாரல்
> கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே”

(குறுந். பா: 3)

என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவி, தலைவன் மீதுள்ள அன்பின் ஆழத்தையும் உணர்வுகளையும் மொழியின் வழியாகத் தோழியிடம் பகிர்ந்து கொள்கிறாள். அந்த வகையில், மலர்வதியின் ‘காத்திருந்த கருப்பாயி’ படைப்பில் இடம்பெறும் மொழிப் பயன்பாடு கதைமாந்தர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மையைக் கொண்டுள்ளது.

> “நீங்க எல்லாம் பெரிய படித்தங்காரங்களாக இருந்தும் ஏன் இப்பிடி புத்தி மங்கிப் போகுது… ஏட்டுக்கல்வி கத்துத் தராததை நான் கத்துக்கிட்டேன்… உண்மையான கல்வி எது தெரியுமா? அடுத்த மனுசங்களுக்க மதிக்கிறது. அடுத்தவங்க கண்ணீருக்கு காரணமாக இருக்காதது… வாழ்க்கை வெறும் விளையாட்டா வெறும் பொழுதுபோக்கா பாக்கிற உங்களுக்கெல்லாம் என்னைப் போல உள்ள பெண்ணுங்களுக்க உணர்வு புரியவே புரியாது. வாழ்க்கையில வெறும் சந்தோசம் மட்டும் தேடுற தொண்ணும் தப்பில்ல… ஆனா அடுத்தவங்களைத் துன்புறுத்தி இன்பம் தேடுறது பெரிய தப்பு. எங்களைப் போல உள்ளவங்களக்கு இந்த உலகத்துல பெருசா இல்லாம

> போனாலும் சிறுசாட்டாவது வாழ ஆசையுண்டு. அந்த ஆசையில இருக்கிற உயிரை தயவு செய்து இனியும் கொல்லாதீங்க” (காத். கரு. ப: 76)

என்ற இவ்வரிகள் மலர்வதியின் ‘காத்திருந்த கருப்பாயி’ படைப்பில் இடம்பெறும் மொழிப் பயன்பாடு சுந்தரி என்னும் கதைமாந்தரின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மொழியானது வெறுமனே கருத்துகளை எடுத்துரைப்பதற்கான கருவியாக மட்டுமல்லாமல் பேச்சு வழக்குச் சொற்களின் வழியாக உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளும் தகவல் தொடர்புச் சாதனமாக அமைகின்றது என்பதை இது பதிவு செய்கின்றது.

## சமூகச் சிந்தனைகளைப் பரிமாறும் மொழிவழித் தகவல் தொடர்பு

மொழி தனிமனிதனின் எண்ணங்களை வெளிப்படுத்துவதோடு ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள், நம்பிக்கைகள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் குறித்த சிந்தனைகளையும் தலைமுறைக்குக் கடத்துகிறது. இதனை,

“யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா”

(புறம். பா: 192)

என்ற புறநானூற்று வரிகள் எல்லா மக்களையும் உறவினராகக் காணும் பரந்த மனிதநேயப் பார்வையையும் பெரியோர், சிறியோர் என்ற வேறுபாட்டைத் தவிர்க்கும் சமத்துவச் சிந்தனையையும் வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை, அவர்களின் உழைப்பு, சமூக அவமதிப்பு, வறுமை மற்றும் பெண்களின் போராட்டம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு எழுதப்பெற்ற புதினம் ‘தூப்புக்காரி’. இப்புதினத்தில்,

> “ஏன் பூவு நீ எழுத படிச்ச தெரிஞ்சல தானே ஒரு கம்ப்யூட்டரு அது இதுண்ணு படிச்சி பெரிய வேலையில போப்பிடாதா? இந்த ஒலகத்துல நெறைய நெறைய கண்டுப்பிடிக்கிறாங்க. ஆனா அழுக்கு வார சாக்கட கழுவ மட்டும் ஒரு எழவும் கண்டுபிடிச்சலே. அத நீ கண்டுபுடி பிள்ள.” (தூப்புக்காரி, ப. 78)

என்று மாரி கூறிய வரிகள் அவரது தனிப்பட்ட உணர்வை மட்டும் வெளிப்படுத்தவில்லை; கல்வி, தொழில்நுட்ப வளர்ச்சி, வேலைவாய்ப்பு, அடிப்படைத் தேவை, சமூக ஏற்றத்தாழ்வு போன்றவற்றைப் பற்றிய சிந்தனைகளையும் உரையாடல் வழியாகப் பகிர்ந்து கொள்கின்றன.

## வட்டார மொழிவழித் தகவல் தொடர்பு

ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்த மக்கள் தங்களுக்குள் பயன்படுத்தும் மொழி அல்லது பேச்சு வழக்குச் சொற்கள் வட்டார மொழிச் சொற்கள் எனப்படுகின்றன. கலித்தொகைப் பாடலில்,

“நீரார் செறுவில் நெய்தலொடு நீடிய
நேர்இதழ் ஆம்பல் நிரைஇதழ் கொண்மார்”

(கலித். பா: 75)

‘செறு’ என்னும் சொல் ‘வயல்’ என்ற பொருளில் இடம்பெறுகிறது. இச்சொல் பழந்தமிழ்ச் சொல்வழக்கில் நிலப்பரப்பைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் குறிப்பிட்ட சொற்கள் வட்டாரப் பயன்பாட்டின் தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் மலர்வதியின் படைப்புகள்

கன்னியாகுமரி மாவட்ட நாஞ்சில் வட்டார மொழியை அடிப்படையாகக் கொண்டவை. சான்றாக,

- பரியெடு – வெட்கம்
- சக்கறம் – பணம்
- ஜீவிதம் – வாழ்க்கை
- அண்டியாபீசு – முந்திரித் தொழிற்சாலை
- செரட்டை – தேங்காய்மூடி

போன்ற சொற்களில் அப்பகுதி மக்களின் பேச்சுவழக்கில் வாழ்வியல் அனுபவங்களும் பதிவாகியுள்ளன. இத்தகைய சொற்கள் தொழில், சமூகநிலை, உறவுமுறை மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைப் பரிமாறுகின்றன.

## முடிவுரை

மலர்வதியின் படைப்புகளில் மொழியின் வழியாக நிகழும் தகவல் தொடர்பு மனித உணர்வுகள், சமூகச் சிந்தனைகள் மற்றும் வட்டார வாழ்வியலை வெளிப்படுத்தும் முக்கியக் கூறாகத் திகழ்கின்றது. மொழியின் வழியாக உணர்வுகளும் கருத்துகளும் பரிமாறப்படுவதுடன் வட்டார மொழிப் பயன்பாடு மக்களின் பண்பாடு, தொழில், வாழ்க்கை முறை ஆகியவற்றை இயல்பாகப் பதிவு செய்கின்றது. எனவே மொழியும் தகவல் தொடர்புச் சாதனமாக அமைவதை இக்கட்டுரையின் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

## துணைநூற்பட்டியல்


1. மலர்வதி – தூப்புக்காரி, மதி வெளியீடு, வெள்ளிக்கோடு, கன்னியாகுமரி மாவட்டம். ஐந்தாம் பதிப்பு: 2014.
2. காத்திருந்த கருப்பாயி, கிழக்கு பதிப்பகம், 177, அம்பாள் பில்டிங், இராயப்பேட்டை, சென்னை – 600 014. முதற் பதிப்பு: 2017.
3. அண்டியாபீசு, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், 669, கே.பி. சாலை, நாகர்கோயில் – 629 001. முதற் பதிப்பு: 2024.
4. சுப்பிரமணியன், ச.வே. – கலித்தொகை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு: 2011.
5. குறுந்தொகை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு: 2010.
6. நற்றிணை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு: 2010.
7. புறநானூறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு: 2011.
8. கிருட்டிணசாமி, வெ. – தகவல் தொடர்பியல், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, சென்னை. முதற் பதிப்பு: 1991.
9. பேச்சிமுத்து, கரு. – திருக்குறள் மற்றும் ஏழினந்தமிழ், அகரூர் கல்வி அறக்கட்டளை, 3, திருவள்ளுவர் தெரு, குமரேசபுரம், திருச்சி – 620 013.